**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.828/2025 | Date | : 20.05.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.1 | Taluk | : |
| Name | : **முருகேசன்** | Calling | : |
| Father Name | : **சுப்பிரமணியம்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.05.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு GRASS School அருகே ANA நகரில் குடியிருந்து கனிராவுத்தூர் குளத்தில் உள்ள டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2023 ஆம் தேதி காலை நான் வேலைக்கு சென்று விட்டேன். மதியம் 01.00 மணிக்கு சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்தேன். செல்போனை என் வீட்டு போர்டிகோவில் உள்ள ஜன்னல் திட்டின் மீது எனது கோல்ட் கலர் VIVO செல் போனை சார்ஜ் போட்டுவிட்டு நான் வீட்டினுள் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று யாரோ ஒரு நபர் உள்ளே நுழைந்தது போல் இருந்தது நான் எழுந்து வந்து பார்த்தபோது, என் வீட்டின் மதில் சுவரைத் தாண்டி ஒரு நபர் ஓடினார். நான் யாரோ ஓடுகிறார்கள் என்று சத்தம் போட்டேன் நான் சார்ஜ் போட்டு இருந்த என் செல்போனையும் காணவில்லை.

2. பின்பு நானும் எனது பக்கத்து வீட்டுக்காரர் செந்தில் என்பவரும் ஓடிச் சென்று அந்த நபரை பிடித்தோம். செல்போனுடன் அவரை பிடித்து சித்தோடு காவல்

நிலையத்தில் ஒப்படைத்தோம். நான் சித்தோடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அந்த நபரை பிடித்து விசாரித்த போது அவரது பெயர் அஜித்குமார் என்றும், கன்னிமார் காட்டில் குடியிருப்பதாகவும் சொன்னார். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் அஜித்குமார் ஆவார்.

3. காவல் நிலையத்தில் போலீசார் செல்போனை கைப்பற்றி எதற்காக என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும். படிவம் 91 இல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(படிவம் 91 ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு போலீசார் எனது வீட்டிற்கு வந்தும் பார்வையிட்டார்கள். காணாமல் போன செல்போனை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செல்போன் என்னுடையதுதான். அந்த செல்போனுடன் தான் ஆஜர் எதிரியை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். **(கோல்ட் கலர் விவோ செல் போன் அ.த.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. செல்போன் வைத்திருந்த இடத்திற்கும் வீட்டின் மதில் சுவருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் பத்து அல்லது பதினைந்து அடி தூரம் இருக்கும். மதில் சுவர் எவ்வளவு அடி உயரத்தில் இருக்கும் என்றால் சுமார் 3 ½ அடி முதல் 04 உயரம் இருக்கும். என்னுடைய வீட்டிற்கும் செந்தில்குமார் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 அடி முதல் 30 அடி தூரம் இருக்கும். செந்தில்குமார் வந்த பிறகு தான் நான் ஓடி சென்று பிடித்தேனா என்றால் ஆமாம். ஒரு நபர் சுவரேறி குதித்து சென்றதாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு சுவர் ஏறி குதிக்கும் போது அவருடைய முகத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

2. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் என் வீட்டில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனது செல்போன் திருடப்படவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் செல்போனை திருடி சென்ற நபரை நான் பார்க்கவில்லை என்றும் அந்த சமயத்தில் நடந்து சென்ற நபரை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.20 17:14:24 -0800

Judicial Magistrate No.III,
Erode.